# மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

## 595 பேருக்கு பரிசோதனை

சென்னை, பிப். 24: பயணிகள், பொதுமக்கள் வசதிக்காக, சைதாப்பேட்டை, ஆலந்தூர், ஏஜி, டி.எம்.எஸ் உள்பட 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் திங்கள்கிழமை நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 595 பேர் பயனடைந்தனர்.

மெட்ரோ ரயில் பயணிகள் நலனுக்காக, பல்வேறு வசதிகளை மெட்ரோ ரயில் நிறுவனம் செய்து வருகிறது. அந்த வகையில், மெட்ரோ ரயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனை ஆகியவை சார்பில், மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த மருத்துவ முகாம் சென்ட்ரல், ஏஜி, டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம், ஷெனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி சைதாப்பேட்டை, ஆலந்தூர், ஏஜி டி.எம்.எஸ் உள்பட 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச மருத்துவமுகாம் திங்கள்கிழமை தொடங்கியது. சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், ஆலந்தூர், ஏஜி, டி.எம்.எஸ்., ஆயிரம் விளக்கு, திருமங்கலம், சென்ட்ரல் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெற்றது. மெட்ரோ ரயில் பயணிகள், பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிறுவன ஊழியர்கள் என்று மொத்தம் 595 பேருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டது. மருத்துவ முகாமில் பிஎம்ஐ(உயரம், எடை), ரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை ஆகிய சோதனைகள் பார்க்கப்பட்டன. மேலும், ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

2-ஆவது நாள் மருத்துவ முகாம் : இரண்டாவது நாள் மருத்துவ முகாம் சென்ட்ரல், ஏஜி, டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி., திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம், செனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெறவுள்ளது.